**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.55/மா/2025
நாள் 19.08.2025

திருமதி. R. பரமேஸ்வரி, ...... முறையீட்டு மனுதாரர்
திருவள்ளூர்.

உதவி ஆணையர், ....... எதிர் மனுதாரர்
கிழக்கு மண்டலம்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூர், ராகவேந்திரா நகர் (விரிவாக்கம்), கதவு எண் 20 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. R. பரமேஸ்வரி என்பவரின் 24.01.2025 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 25.01.2025 தேதியில் பெறப்பட்டு 55/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனுக்கள் நாள் 06.12.2024, 24.01.2025 மற்றும் 09.04.2025 ஆகியன பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூர், ராகவேந்திரா நகர் (விரிவாக்கம்), கதவு எண் 20 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. R. பரமேஸ்வரி என்பவர் 06.12.2024, 24.01.2025 மற்றும் 09.04.2025 நாளிட்ட முறையீட்டு மனுக்களில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

**6.12.2024 நாளிட்ட மனுவில்–**

"நான் சென்னையில் உள்ள அரசு மருத்துவமனையில் செவிலியராக பணி செய்கிறேன். எனக்கு சொந்தமான நிலம் கோவை மாவட்டம், சிங்காநல்லூரில் உள்ளது. பத்திர எண்.4655/28.6.2006 மூல பத்திர எண் 791/10.4.87.

நான் கடந்த இரு வருடங்களுக்கு முன் வீடு கட்டுவதற்கு நில அளவை செய்வதற்கு விண்ணப்பம் செய்தேன். ஆனால் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட கடிதத்தில் உங்களது இடத்தின் மீது ஒரு பகுதியில் திட்ட சாலை அமைகிறது என்றும் அளவை பணி செய்ய முடியாது என்றும் கூறிவிட்டனர் (கடிதம் 7.3.2023). மேலும், எங்களது இடமானது மூலபத்திரத்தின்படி பட்டா உள்ள நிலம் ஆகும். (பட்டா எண் 411 உரிமையாளர் எம். கந்தசாமி)

இதன் காரணமாக நான் கோவை கோட்டாட்சியர் அவர்களுக்கு மனு அளித்தேன். மனு நாள் (16.3.23). கடந்த இரண்டு வருடங்களாக பலமுறை அரசு அலுவலகங்களை அணுகி எனது பிரச்சனை முடியவில்லை. அதற்குண்டான அனைத்து ஆவண நகல்கள் இத்துடன் இணைத்துள்ளேன். (1) பத்திர நகல் 4655/06 (2) மூலபத்திரம் 791/81 (3) பட்டா (411–எம். கந்தசாமி), (4) TSLR, (5) வட்டாட்சியரின் பரிந்துரை கடிதம் (6) நில அளவையர் கடிதம் (7) வில்லங்க சான்று [1975 முதல் 2023 முடிய] (8) நிலம் வீட்டுமனையாக வரைமுறை படுத்தியதிற்கான ஆவணங்கள் (9) நில வரைபட நகல்

மேற்கண்ட விவரங்களின்படி எனது விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து ஆவன செய்யுமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

**<u>24.01.2025 நாளிட்ட மனுவில்:</u>**

''நான் சென்னையில் உள்ள ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிகிறேன். எனக்கு சொந்தமான வீட்டுமனை பத்திர எண் **4655/28.6.2006** மூல பத்திர எண் **791/10.4.87** பட்டா எண் **411.** கோவை மாநகராட்சி சிங்காநல்லூர் கிழக்கு மண்டலப் பகுதியில் உள்ளது. நில அளவு செய்ய விண்ணப்பம் செய்திருந்தேன். ஆனால் **07.03.2023**ல் வந்த கடிதத்தில் என் இடத்தின் ஒரு பகுதியில் திட்ட அளவை ரோடு அமைகிறது என்றும், அளவை பணி செய்ய முடியாது என்றும் கூறிவிட்டனர்.

இதன் தொடர்பாக கோவை கோட்டாட்சியர் அவர்களுக்கு **16.03.2023** மனு அளித்தேன். **2** வருடமாக பலமுறை அரசு அலுவலகங்களை அணுகி பிரச்சனை முடியவில்லை. ஆகவே, பரிசீலனை செய்து தருமாறு சென்னை தமிழ்நாடு உள்ளாட்சி முறை மன்ற செயல் அலுவலர் அவர்களுக்கு **06.12.2024** அன்று பதிவுத் தபாலில் மனுத் தாக்கல் செய்திருந்தேன். C. No.1503/M/2024, அதில் Form-Iல் ''நகராட்சி ஆவண பதிவில் திருத்தம் செய்வது தொடர்பாக'' என்று தவறுதலாக எழுதி விட்டேன். ''சரியானது'' கோவை மாநகராட்சி சிங்காநல்லூர் கிழக்கு மண்டல ஆவண பதிவில் திருத்தம் செய்வது தொடர்பாக'' என திருத்திக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் திருத்திய Form-Iம் ஒப்புகை படிவம் நகலும் இணைத்துள்ளேன். தயவு கூர்ந்து என் மனுவை பரிசீலினை செய்து ஆவன செய்து தருமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

**<u>09.04.2025 நாளிட்ட மனுவில்–</u>**

''நான் கடந்த மூன்று வருடங்களாக கோவை மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலகத்தில் தீர்வு வேண்டி பலமுறை மனு செய்து போராடினேன். இறுதியாக மூன்று வருடங்களுக்கு பிறகு தங்களுக்கு தடையின்மை சான்று கொடுக்க முடியாது என்று தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளனர்.

எங்களது இடத்திற்கு அருகில் கிழக்கு புறத்தில் 30 மீட்டர் தூரத்தில் (Underground Road) செல்கிறது. மேலும் 100 மீட்டர் தூரத்தில் உயர்மட்ட மேம்பாலம் செல்கிறது. ஆனால் DD Plan சிங்காநல்லூர் 33–ன்படி எங்கள் இடத்தின்மீது 20 அடி அணுகு சாலை செல்கிறது என்றும் கூறுகின்றனர்.

அணுகுசாலை முடிவில் ரயில்வே இடம் உள்ளது. அந்த இடத்தில் (compound) சுவர் எழுப்பியுள்ளதால் பொதுமக்கள் யாரும் பயன்படுத்த முடியாது.

எங்கள் இடத்தின் மீது செல்லும் சாலையால் யாருக்கும் பயன் இல்லை. ஏனென்றால் அது ஒரு (Dead End) ஆகும்.

எங்களது இடத்தின் மீது போடப்பட்டுள்ள (DD Plan 33படி) சாலையை அகற்றிடுமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இக்கடிதத்துடன் நான் இறுதியாக மாநகராட்சி அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட கடிதத்தையும் தங்களது பார்வைக்கு இணைத்துள்ளேன்.

எனது விண்ணப்பத்தை பரிசீலனை செய்து ஆவன செய்யுமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட மனுக்கள் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 27.02.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.

4. கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், உதவி ஆணையாளர் கடிதம் எண்.12195/2023/கி.எச்.2, நாள் 23.05.2025 மற்றும் 23.06.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளார்:

> "கோயம்புத்தூர் தெற்கு வட்டாட்சியர் அவர்களின் கடிதத்தின்படி, கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட சிங்காநல்லூர் கிராமம், க.ச. எண் 92/1Bpt மற்றும் 102/1pt, வார்டு எண் 35(A1), பிளாக் எண் 37, T. S. No.40–ல் ஆணையாளர் கோவை மாநகராட்சி தெரு என உள்ளதை நீக்கம் செய்ய தடையின்மை சான்று கோரப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாநகராட்சியின் அலுவலக கடிதம் எண்.12195/2023/கி.எச்.2, நாள் 23.05.2025 வாயிலாக திருமதி பரமேஸ்வரி க/பெ திரு. தனபால் ராஜீ (மனுதாரர்) என்பவருக்கு 21.03.2025 அன்று இவ்வலுவலகத்தில் நேரடியாக தகவல் வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே வழங்கப்பட்ட இவ்வலுவலக கடிதத்தின் நகல் இணைத்து மாண்பமை நடுவத்தின் மேலான பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது." என தெரிவித்துள்ளார்.
>
> மேலும் 23.06.2025 நாளிட்ட அறிக்கையில், மனுதாரர் "திருமதி. R. பரமேஸ்வரி அவர்கள் கிரையம் பெற்றதாக கூறும் மனை கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு வட்டம், சிங்காநல்லூர் கிராமம், பழைய புல எண் 102/1–பகுதியில், கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம், வார்டு எண் 55–ல் அமைந்துள்ளது. மனுதாரர் பத்திர எண் 4655/2006 நாள் 28.06.2006 ஆவணப்படி மேற்படி 1596.5 சதுரடி நிலத்தை கிரையம் பெற்றார். அதைத் தொடர்ந்து, நிலங்கள் மறுஅளவை செய்யப்பட்டு கிராம புல எண்கள் நகர நில அளவை எண்களாக 2009–ஆம் ஆண்டு மாற்றப்பட்டது.
>
> கோயம்புத்தூர் தெற்கு வட்டாட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ஆர்.டி.ஆர்/4544/2019, நாள் 10.12.2019ன் வாயிலாக மனுதாரர் திருமதி. R. பரமேஸ்வரி அவர்களது இடம் கோவை மாவட்டம், கோவை தெற்கு வட்டம் நகரளவை வார்டு எண் 35, பிளாக் எண் 37, நகரளவை எண் 2–ல் ஓர் பகுதியில் அமைந்துள்ளது எனவும், எனவே அவரது பெயரை கூட்டாக சேர்க்குமாறும் உத்தரவிடப்பட்டது. மேற்படி நகர சார் ஆய்வாளர் அவர்களால் அவ்வாறே ஆவணங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. கோயம்புத்தூர் தெற்கு வட்டாட்சியர் அவர்களின் செயல்முறை உத்தரவு மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில், மனுதாரரின் அனுமதியற்ற மனைக்கு கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் உதவி ஆணையரின் மனை வரன்முறை ந.க.எண்.5324/2018/எச்1 (கி) /950–B-II, நாள் 10.03.2020–ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
>
> மேற்படி வருவாய்த் துறையால் பராமரிக்கப்படும் நகரளவை எண் 2–ல் அவரது நிலம் கூட்டாக சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து, மனுதாரரால் அவரது நிலத்தை அளவீடு செய்து தரும்படி கோரப்பட்டது. அதைத் தொடர்ந்து, நகர சார் ஆய்வாளர் அவர்களால் புல தணிக்கை மேற்கொள்ளப்பட்டு, மேற்படி மனுதாரரால் தனது நிலம் என சுட்டிக் காட்டப்பட்ட இடம், அவரது கிரைய ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள பழைய புல எண் 102/1–க்கு மாறாக பழைய புல எண் 92/1B1–பகுதியில், தற்போது நகரளவை வார்டு எண் 35, பிளாக் எண் 37, நகரளவை எண் 1 மற்றும் நகரளவை வார்டு எண் 35, பிளாக் எண் 35, நகரளவை எண் 40–ல் ஒரு பகுதியாக இருப்பதாலும் அதில் நகரளவை எண் 40 "தெரு"வாகவும், நகரளவை எண் 1–ல் மனுதாரர் பெயர் இல்லாததாலும், எல்லை அளவுப் பணி செய்ய இயலவில்லை என்ற விவரம் கிழக்கு மண்டலம் உதவி ஆணையாளரின் கடிதம் ந.க.எண்.10032/2022/கி.எச்4,நாள் 17.03.2023 வாயிலாக மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து மனுதாரர் வருவாய்த் துறை நில அளவை ஆவணங்களில் திருத்தங்கள் செய்யக் கோரி கோயம்புத்தூர் தெற்கு வருவாய் கோட்டாட்சியரிடம் விண்ணப்பம் செய்தார். அதன் மீது மேல்நடவடிக்கை எடுக்கும் பொருட்டு கோயம்புத்தூர் தெற்கு வருவாய் கோட்டாட்சியரின் விசாரணை அழைப்பாணை எண்.1787/2023/ஆ2, நாள்.16.05.2023–ன்படி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின் முடிவில், நகரளவை ஆவணங்களில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களிடம் தடையின்மை சான்று வேண்டி வட்டாட்சியர், கோயம்புத்தூர் தெற்கு அவர்களால் கடிதம் ந.க.எண்.2293/இ2, நாள் 09.10.2023 அனுப்பப்பட்டது. இக்கடிதத்தின் மீது மேல்நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, கள ஆய்வு செய்யப்பட்டது. கள ஆய்வில் கீழ்க்கண்டவை கண்டறியப்பட்டது:

1. மனுதாரரின் நிலம் கிரைய ஆவணத்தின்படி சிங்காநல்லூர் கிராமம், பழைய புல எண் 102/1–பகுதியில் அமைந்துள்ளது.
2. மனுதாரர் தனது நிலம் என சுட்டிக்காட்டும் நிலம் தற்போது நகர நில அளவை பதிவேட்டின்படி பழைய புல எண் 92/1B1–பகுதியில் அமைந்துள்ளது.
3. பழைய புல எண் 92/1B1–பகுதியில் அமைந்துள்ள, "தெரு" என வகைப்படுத்தப்பட்ட நகரளவை வார்டு எண் 35, பிளாக் எண் 35, நகரளவை எண் 40–ல் ஒரு பகுதியில், "ஆணையாளர் – மாநகராட்சி" என்ற பெயரை நீக்கம் செய்து, நில அளவை உட்பிரிவு மேற்கொண்டு தனது பெயரை சேர்க்க மனுதாரர் கோருகிறார்.
4. மேற்படி பழைய புல எண் 92/1B1–பகுதியில் சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் (Singanallur Detailed Develoment Plan) எண் 33–ல் சாலை நிலநிருத்தப்பட்டுள்ளது.
5. மனுதாரரின் கிரைய ஆவணம் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் உதவி ஆணையரின் மனை வரன்முறை உத்தரவு ந.க.எண்.5324/2018/எச்1 (கி)/950–B-II, நாள் 10.03.2020 உடன் இணைத்து வழங்கப்பட்ட மனை வரைபடத்தில் காணும் "கிழமேல் இரயில்வே ரோடு" (East West Railway Road) நிலையில் காணப்படவில்லை.

மேற்படி காரணங்களை அடிப்படையாகக் கொண்டு, மனுதாரருக்கு வருவாய் ஆவணங்களில் திருத்தம் மேற்கொள்ள தடையின்மை சான்று வழங்க இயலாது என்ற விவரம் கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் உதவி ஆணையாளரின் கடிதம் எண்.12195/2023/கி.எச்2, நாள் 23.05.2025ன் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டது என்பதை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் ஆணைக்கிணங்க மேற்படி விரிவான அறிக்கை பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேற்படி அறிக்கையின் பேரில், மனுதாரரது முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுமாறு மிகவும் பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்ளப்படுகிறது." என தெரிவித்துள்ளார்.

5. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவத்தில் 24.06.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.06.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் மற்றும் மனுதாரரின் சகோதரர் ஆகியோர் 24.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

"நான் சென்னையில் உள்ள ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிகிறேன். கோயம்புத்தூர் சிங்காநல்லூர் கிராமம் க.ச.எண் 92/1 மற்றும் 102/1 அமைந்துள்ள 7 செண்ட் 322 சதுரடியை திருமதி.ஈஸ்வரி அவர்களிடமிருந்து 2006 வருடம் கிரையம் செய்தேன். இதன் பத்திர எண் 4655/28.6.2006 மூல பத்திர எண் 791/10.4.87 பட்டா எண் 411. கோவை மாநகராட்சி சிங்காநல்லூர் கிழக்கு மண்டலப் பகுதியில் உள்ளது. நில அளவு செய்ய விண்ணப்பம் செய்திருந்தேன். ஆனால் 07.03.2023ல் வந்த கடிதத்தில் என் இடத்தின் ஒருபகுதியில் திட்ட அளவை ரோடு அமைகிறது என்றும், அளவை பணி செய்ய முடியாது என்றும் கூறிவிட்டனர். இது குறித்து கோயம்புத்தூர் மாநகராட்சியிடமிருந்து தகவல் ஏதும் பெறப்படவில்லை. மேற்குறிப்பிட்ட சாலையினால் பொதுமக்களுக்கு எவ்வித பயனும் இல்லை.

இதன் தொடர்பாக கோவை கோட்டாட்சியர் அவர்களுக்கு 16.03.2023 மனு அளித்தேன். 2 வருடமாக பலமுறை அரசு அலுவலகங்களை அணுகி பிரச்சனை முடியவில்லை. எனவே எனது இடத்தில் ஒரு பகுதி ஆணையாளர் கோவை மாநகராட்சி தெரு என உள்ளதை நீக்கம் செய்து தடையின்மை சான்று வழங்க கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளருக்கு உத்தரவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்."

7. கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் உதவி ஆணையாளர் சார்பாக உதவி நகர திட்டமிடுநர் 24.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மேற்கண்ட மனுவில் குறிப்பிட்ட புகார் தொடர்பாக மனுதாரரின் இடத்தினை ஆய்வு செய்ததில் மனுதாரர் பட்டா கூறும் புலமானது வார்டு AI பிளாக் 35, T.S No.40ல் ஆணையாளர் கோவை மாநகராட்சி தெரு என உள்ளது. மனுதாரருக்கு கிரைய பத்திர எண். 4655/2006ன்படி மனுதாரருக்கு சொந்தமான புலமாக உள்ளது. மேற்படி புலமானது கிராம புல எண் 102/1pt-ன்படி பட்டா புலமாக கூட்டாக உள்ளது. மனுதாரரின் பத்திரபடியும், மூலபத்திரத்தின்படியும் வில்லங்க சான்றிதழின்படியும், மனுதாரர் பட்டா மாறுதல் கோரிய இடம் DD Plan Singanallur No.33 (Detailed Development Plan) வரைபடத்தின்படியும் நகரளவு வருவாய் ஆவணங்களின்படியும் பட்டா மாறுதல் செய்ய தடையின்மை சான்று வழங்க வழிவகை இல்லை என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் கள ஆய்வில் மனுதாரரால் சுட்டிக்காட்டப்படும் இடத்தின், சர்வே 92/1. ஆனால் ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள இடத்தின் சர்வே எண் 102/1 என மாறுதலாக உள்ளது. மனுதாரரால் இடத்தை சரியான முறையில் அடையாளம் காட்டப்பட்டு நிலஅளவையாளரால் அளவீடு செய்தால் மட்டுமே, மேல் நடவடிக்கை எடுக்க இயலும் என இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்".

8. மனுதாரரின் முறையீட்டு மனுக்கள், வாக்குமூலம், கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி நகர திட்டமிடுநரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர், சென்னையில் உள்ள ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிவதாகவும், தனக்கு சொந்தமான வீட்டுமனை கோவை மாநகராட்சி சிங்காநல்லூர் கிழக்கு மண்டலப் பகுதியில் உள்ளது எனவும், அம்மனை மூலபத்திரத்தின்படி பட்டா உள்ள நிலம் எனவும், அந்த இடத்தில் தான் வீடு கட்டுவதற்கு

நில அளவை செய்வதற்கு விண்ணப்பம் செய்ததாகவும், ஆனால் தன் இடத்தின் ஒரு பகுதியில் திட்ட சாலை அமைகிறது என்றும், அளவை பணி செய்ய முடியாது என கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகத்தில் கூறிவிட்டதாகவும், இதன் தொடர்பாக கோவை கோட்டாட்சியருக்கு மனு அளித்தும், தன்னுடைய பிரச்சனை முடியவில்லை எனவும், தான் மூன்று வருடங்களாக கோவை மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலகத்தில் பலமுறை மனு செய்தும், இறுதியாக தடையின்மை சான்று கொடுக்க முடியாது என்று தனக்கு தெரிவிக்கப்பட்டது எனவும், மேலும், தன்னுடைய இடத்திற்கு அருகில் கிழக்கு புறத்தில் 30 மீட்டர் தூரத்தில் (Underground Road) செல்கிறது எனவும், 100 மீட்டர் தூரத்தில் உயர்மட்ட மேம்பாலம் செல்கிறது எனவும், ஆனால் DD Plan சிங்காநல்லூர் 33–ன்படி தன்னுடைய இடத்தின் மீது 20 அடி அணுகு சாலை செல்கிறது என்று தெரிவிக்கப்பட்டதாகவும், அணுகுசாலை முடிவில் ரயில்வே இடம் உள்ளது எனவும், அந்த இடத்தில் (compound) சுவர் எழுப்பியுள்ளதால் பொதுமக்கள் யாரும் பயன்படுத்த முடியாது எனவும், தன்னுடைய இடத்தின் மீது செல்லும் சாலையால் யாருக்கும் பயன் இல்லை எனவும், ஏனென்றால் அது ஒரு (Dead End) ஆகும் எனவும், தன்னுடைய இடத்தின் மீது போடப்பட்டுள்ள (DD Plan 33–ன்படி) சாலையை அகற்றிடுமாறும், தனது இடத்தில் ஒரு பகுதி ஆணையாளர் கோவை மாநகராட்சி தெரு என உள்ளதை நீக்கம் செய்து தடையின்மை சான்று வழங்க கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மேற்கண்ட மனுவில் குறிப்பிட்ட புகார் தொடர்பாக மனுதாரரின் இடத்தினை ஆய்வு செய்ததில் மனுதாரர் பட்டா கூறும் புலமானது வார்டு AI பிளாக் 35, T.S No.40ல் ஆணையாளர் கோவை மாநகராட்சி தெரு என உள்ளது என்பதும், கிரைய பத்திர எண். 4655/2006ன்படி மனுதாரருக்கு சொந்தமான புலமாக உள்ளது என்பதும், மேற்படி புலமானது கிராம புல எண் 102/1pt-ன்படி பட்டா புலமாக கூட்டாக உள்ளது எனவும், மனுதாரரின் பத்திரபடியும், மூலபத்திரத்தின்படியும் வில்லங்க சான்றிதழின்படியும், மனுதாரர் பட்டா மாறுதல் கோரிய இடம் DD Plan Singanallur No.33 (Detailed Development Plan) வரைபடத்தின்படியும் நகரளவு வருவாய் ஆவணங்களின்படியும் பட்டா மாறுதல் செய்ய தடையின்மை சான்று வழங்க வழிவகை இல்லை என்பதும், மேலும் கள ஆய்வில் மனுதாரரால் சுட்டிக்காட்டப்படும் இடத்தின் சர்வே எண் 92/1 என்பதும் ஆனால் ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள இடத்தின் சர்வே எண் 102/1 என மாறுதலாக உள்ளது என்பதும், மனுதாரரால் இடத்தை சரியான முறையில் அடையாளம் காட்டப்பட்டு நிலஅளவையாளரால் அளவீடு செய்தால் மட்டுமே, மேல் நடவடிக்கை எடுக்க இயலும் என்பதும் கோயம்புத்தூர் மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி நகர திட்டமிடுநரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுவில் குறிப்பிட்ட புகார் தொடர்பாக மனுதாரரின் இடத்தினை கோயம்புத்தூர் மாநகராட்சியால் ஆய்வு செய்ததில், மனுதாரரின் பத்திரபடியும், மூலபத்திரத்தின்படியும் வில்லங்க சான்றிதழின்படியும், மனுதாரர் பட்டா மாறுதல் கோரிய இடம் DD Plan Singanallur No.33 (Detailed Development Plan) வரைபடத்தின்படியும் நகரளவு வருவாய் ஆவணங்களின்படியும் பட்டா மாறுதல் செய்ய தடையின்மை சான்று வழங்க வழிவகை இல்லை எனவும், மேலும் கள ஆய்வில் மனுதாரரால் சுட்டிக்காட்டப்படும் இடத்தின், சர்வே எண் 92/1 என்றும், ஆனால் ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள இடத்தின் சர்வே எண் 102/1 என மாறுதலாக உள்ளது என்றும், மனுதாரரால் இடத்தை சரியான முறையில் அடையாளம் காட்டப்பட்டு நிலஅளவையாளரால் அளவீடு செய்தால் மட்டுமே, மேல் நடவடிக்கை எடுக்க இயலும் என கோயம்புத்தூர் மாநகராட்சி உதவி நகர திட்டமிடுநர் வாக்குமூலத்தில் தெரிவித்த நிலையில், மேற்கொண்ட பொருள் குறித்து வருவாய் துறை மற்றும் நில அளவை துறையுடன் கலந்தாலோசித்து அப்பகுதியினை முழுமையாக அளவீடு செய்து, திட்ட சாலை அமையவுள்ள

இடத்தை உறுதி செய்து, அதனடிப்படையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் உதவி ஆணையருக்கு உத்தரவிடுமாறு, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திருமதி R. பரமேஸ்வரி,
கதவு எண்.20, ராகவேந்திரா நகர் (விரிவாக்கம்),
இருதிய ஈஸ்வரர் கோவில் (அருகில்),
திருநின்றவூர்,
சென்னை–602 024.

(2) ஆணையர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்.

3) உதவி ஆணையாளர்,
கிழக்கு மண்டலம்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்–641 005.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

5) இணை இயக்குநர்/
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.